இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க, QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது nrtamils.tn.gov.in வலைதளத்தை பார்க்கவும்.

மேலும் தகவல்களுக்கு, அயலகத் தமிழர் நல (24x7) உதவி எண்ணை அழைக்கவும்
**+91 80690 09901.**

அயலகத் தமிழர் நலத்துறையின் சமீபத்திய தகவல்களுக்கு கீழ்க்காணும் சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடரவும்

- @nonresidenttamils
- nrtchennai1038
- @TamiliansNRT
- nrt-welfare
- @nonresidenttamils1038



அயலகத் தமி ழர் நல வா ரி யம்

INSURANCE SCHEME

# அயலகத் தமிழர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் - தமிழகத்திற்கு வெளியே தங்களுக்கான பாதுகாப்பு!

## அயலகத் தமிழர்களுக்கான காப்பீடு திட்டம் என்றால் என்ன?

தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவின் பிற பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு காப்பீடு வழங்கும் திட்டம் இது. (i) விபத்து காரணமாக மரணம் மற்றும் (ii) தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயால் பாதிக்கப்படுதல் போன்ற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளில் இக்காப்பீடு திட்டம் உங்களுக்கு உதவும்.

## என்ன வகையான காப்பீடு திட்டங்கள் வழங்கப்படுகிறது?

நீங்கள் தேர்வுசெய்யக்கூடிய இரண்டு வகையான காப்பீடுகள் உள்ளன: முதலாவது தனிப்பட்ட விபத்துக் காப்பீடு, இது கட்டாயமாகும். இரண்டாவது தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு, இது விருப்பமானது

## நான் தகுதியானவனா?

- ஒரு தகுதியான விண்ணப்பதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:
  1. ஆதார் அட்டை அல்லது இந்திய கடவுச்சீட்டு அல்லது இந்திய ஓட்டுநர் உரிமம் அல்லது வாக்காளர் அடையாள அட்டை
  2. பான் அட்டை
  3. அயலகத் தமிழர் அடையாள அட்டை
- தனிப்பட்ட விபத்து காப்பீடு: விண்ணப்பதாரர் 18 முதல் 70 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு : விண்ணப்பதாரர் 18 முதல் 60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- நீங்கள் இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் அயலகத் தமிழராக[1] இருந்தால், உங்களிடம் செல்லுபடியாகும் இந்திய கடவுச்சீட்டு (Passport) மற்றும் விசா இருக்க வேண்டும். நீங்கள் ஒரு மாணவராக இருந்தால், உங்களிடம் கூடுதலாக மாணவர் விசா மற்றும் கல்லூரி அடையாள அட்டை இருக்க வேண்டும்.
- நீங்கள் இந்தியாவில் வசிக்கும் அயலகத் தமிழராக இருந்தால் (அதாவது தமிழ்நாட்டிற்கு வெளியே)[2], ஆறு மாதங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டிற்கு வெளியே நீங்கள் வசிப்பதை உறுதிப்படுத்தும் விதமாக குடியிருப்பு ஆதாரத்தை வழங்க வேண்டும். இதில் வாடகை ஒப்பந்தம்/சமீபத்திய பயன்பாட்டு இரசீது (மின்சாரம் அல்லது தொலைபேசி) அல்லது உங்கள் முதலாளி வழங்கிய பணி நியமன கடிதம் ஆகியவை அடங்கும்.

*1* **அயலகத் தமிழர் (வெளிநாடு)** என்பது இந்தியாவிற்கு வெளியே அதாவது வெளிநாடுகளில் இந்திய கடவுச்சீட்டுடன் வசிக்கும் அல்லது தகுந்த ஆவணங்களுடன் பணியாற்றும் தமிழர் என்று பொருள்படும்
*2* **அயலகத் தமிழர் (இந்தியா)** என்பது, தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவில் பணிபுரியும் அல்லது வசிக்கும், ஆனால் மத்திய, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களை உள்ளடக்காத தமிழர் என்று பொருள்படும்
**தமிழர்** என்றால் தமிழ்நாட்டில் பிறந்தவர் அல்லது குடியமர்ந்தவர் என்று பொருள்.



## அயலகத் தமிழர்களுக்கான காப்பீடு திட்டத்தின் நன்மைகள் என்ன?

**விரிவான காப்பீடு வழங்கப்படுகிறது:**
அயலகத் தமிழர் அடையாள அட்டை வைத்திருப்பவருக்கு குறைந்தபட்சம் INR 5,00,000/- தனிநபர் விபத்துக் காப்பீடு மற்றும் விருப்பத்தின் பேரில் குறைந்தபட்சம் INR 1,00,000/-ற்கான தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு வழங்கப்படுகிறது.

**குறைவான சந்தா கட்டணங்கள்:**
தனிநபர் விபத்துக் காப்பீடு திட்டத்திற்கான சந்தா கட்டணம் INR 395 + GST முதல் உள்ளது.

**நெகிழ்வுத்தன்மை மற்றும் கூடுதல் விருப்பங்கள்:**
தனிநபர் விபத்துக் காப்பீடு திட்டத்துடன் கூடுதலாக விருப்பத்தின் பேரில் தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு INR 350 + GST முதல் வழங்கப்படுகிறது.

**தீவிர நோய்களுக்கான விரிவான பாதுகாப்பு:**
புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, பக்கவாதம் உள்ளிட்ட பல தீவிர நோய்களுக்கான காப்பீடு அளிக்கப்படுகிறது

**மேலும் தகவல்களுக்கு, அயலகத் தமிழர் நல (24x7) உதவி எண்ணை அழைக்கவும் +91 80690 09901.**

அயலகத் தமிழர் நலத்துறையின் சமீபத்திய தகவல்களுக்கு கீழ்க்காணும் சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடரவும்

@nonresidenttamils @TamiliansNRT nrt-welfare

# விபத்தும் அதற்கான இழப்பீடும்

| விபத்தால்ஏற்படும் அபாயம் | இழப்பீடு |
| --- | --- |
| இறப்பு | முழு காப்பீட்டுத் தொகை (100%) |
| இரண்டு கண்களிலும் பார்வை இழப்பு, இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் இழப்பு; ஒரு முழு கை அல்லது ஒரு முழு கால் இழப்பு; ஒரு கண்ணில் பார்வை இழப்பு அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு. | |
| இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் பயன்படுத்த இயலாத நிலை (அ) ஒரு கண் பார்வை இழப்பு மற்றும் ஒரு கை அல்லது ஒரு கால் பயன்படுத்த இயலாத நிலை | |
| ஒரு கை அல்லது ஒரு காலினை இழத்தல் (அ) ஒரு கண்ணில் பார்வை இழத்தல் | காப்பீட்டுத் தொகையின் 50% |
| ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | |
| நிரந்தர மொத்த இயலாமை | (மேலே உள்ளவை தவிர) முழு காப்பீட்டுத் தொகை (100%) |
| நிரந்தர பகுதி இயலாமை | காப்பீடு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இழப்பீடு வழங்கப்படும் (மேலும் விவரங்களுக்கு வலைதளத்தைப் (nrtamils.tn.gov.in) பார்க்கவும்) |
| தாயகம் திருப்பி அனுப்பும் செலவிற்கு மட்டும் | ரூ. 50,000/- |
| மருத்துவ செலவுகள் | ஏற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகோரல் தொகையில் 40% அல்லது காப்பீடு செய்யப்பட்ட மூலதனத் தொகையில் 10% இரண்டில் எது குறைவோ அது வழங்கப்படும் |
| கல்வி உதவித்தொகை | காப்பீடு செய்யப்பட்டவர் இறந்தால் ஒரு குழந்தைக்கு ரூ.1,00,000/- வழங்கப்படும் (அதிகபட்சம் 2 குழந்தைகளுக்கு) |

அயலகத் தமிழர் நலத்துறையின் சமீபத்திய தகவல்களுக்கு கீழ்க்காணும் சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடரவும்

nrtchennai1038 @nonresidenttamils1038



# நான் எவ்வளவு செலுத்த வேண்டும்?

விண்ணப்பதார் கீழ்க்காணும் சந்தாக்களில் தங்களுக்கு ஏற்றதை தெரிவு செய்யலாம்.

### தனிநபர் விபத்து காப்பீடு (கட்டாயம் )

| காப்பீட்டுத் தொகை (INR இல்) | சந்தா ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் செலுத்தப்பட வேண்டும் |
| --- | --- |
| 5,00,000 | 395 + GST + பரிவர்த்தனை கட்டணம் |
| 10,00,000 | 700 + GST + பரிவர்த்தனை கட்டணம் |

# தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு விவரங்கள்

புற்றுநோய், பார்வையின்மை, சிறுநீரக செயலிழப்பு போன்ற தீவிர நோய்கள் இத்திட்டத்தின் கீழ் அடங்கும், அதேசமயம் ஆஞ்சியோபிளாஸ்டி, மது அல்லது போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் coma போன்ற நோய்களுக்கு காப்பீடு வழங்கப்படாது. விரிவான தகவல்களுக்கு nrtamils.tn.gov.in என்ற தளத்தைப் பார்க்கவும்

### தீவிர நோய் பாதுகாப்பு (விருப்பத்தின் பேரில்)

| காப்பீட்டுத் தொகை (INR இல்) | சந்தா ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்பட வேண்டும் |
| --- | --- |
| 1,00,000 | 350 + GST + பரிவர்த்தனை கட்டணம் |
| 2,00,000 | 700 + GST + பரிவர்த்தனை கட்டணம் |
| 3,00,000 | 1,050 + GST + பரிவர்த்தனை கட்டணம் |
| 4,00,000 | 1,400 + GST + பரிவர்த்தனை கட்டணம் |
| 5,00,000 | 1,750 + GST+ பரிவர்த்தனை கட்டணம் |

**மேலும் தகவல்களுக்கு, அயலகத் தமிழர் நல (24x7) உதவி எண்ணை அழைக்கவும் +91 80690 09901.**

# அயலகத் தமிழர்களுக்கான காப்பீடு திட்டம் எப்படி வேலை செய்கிறது?

## வழக்கு 1:

கேரளாவில் வசிக்கும் 55 வயதான அயலகத் தமிழர் ராம், செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளார் மற்றும் எதிர்பாராத விபத்துகளால் ஏற்படும் மருத்துவச் செலவுகளைச் சமாளிக்க நிதிப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்துள்ளார். அவர் அயலகத் தமிழர்களுக்கான காப்பீடுத் திட்டத்தைப் பெற முடிவு செய்கிறார், ரூ.10,00,000/-ற்கான தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டைத் தேர்ந்தெடுத்து, சந்தாவாக ரூ.700/- செலுத்துகிறார். எதிர்பாராவிதமாக, காப்பீடுத் திட்டத்தை வாங்கிய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ராம் ஒரு விபத்தில் இறந்தார். அவரது இரண்டு மகன்களும் தந்தையை இழந்த துக்கத்தில் இருந்தனர் மற்றும் நிதி நிலைமை குறித்து கவலைப்பட்டனர்.

ஆனால் அயலகத் தமிழர்களுக்கான காப்பீடு திட்டத்தினால், ராம் அவர்களின் குடும்பத்தினருக்கு முழு (100%) காப்பீட்டுத் தொகையான ரூ.10,00,000/-ம் வழங்கப்பட்டது.

## வழக்கு 2:

ராஜேஷ், மலேசியாவில் வசிக்கும் 45 வயதுடைய அயலகத் தமிழர். எதிர்பாராத உடல்நலப் பிரச்சனைகளை எதிர்கொள்ள அவர் அயலகத் தமிழர்களுக்கான காப்பீடு திட்டத்தில் ரூ.5,00,000/-ற்கான தனிநபர் விபத்து காப்பீட்டை தேர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்தாவாக ரூ.395/- செலுத்துகிறார், மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு திட்டத்தில் ரூ.5,00,000/-ற்கான காப்பீட்டை தேர்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.1750/- சந்தாவாக செலுத்துகிறார்.

பத்து மாதங்களுக்குப் பிறகு, ராஜேஷ் தனக்கு புற்றுநோய் இருப்பதைக் கண்டுபிடித்தார். இது அவருக்கு கடினமான நேரம், ஆனால் அவர் காப்பீடு வைத்திருப்பதை அறிந்து மனோதைரியம் பெறுகிறார். அவரது காப்பீடு காரணமாக, ராஜேஷ் அவரது மருத்துவ செலவுகளுக்காக ரூ.5,00,000/- பெறுகிறார். இக்கடினமான நேரத்தில் இந்த பணம் அவருக்கு மிகவும் முக்கியமானது.

**இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க, QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது nrtamils.tn.gov.in வலைதளத்தை பார்க்கவும்.**



## வழக்கு 3:

அகிலா அமெரிக்காவில் வசிக்கும் 22 வயதுடைய அயலகத் தமிழர், எதிர்பாரா விபத்துகளை எதிர்கொள்ள அவர் ரூ.5,00,000/-ற்கான அயலகத் தமிழர் தனி நபர் விபத்து காப்பீட்டினை தேர்வு செய்து சந்தாவாக ரூ.395 செலுத்துகிறார்.

மூன்று வருடங்கள் கழித்து ரூ.395 செலுத்தி தனது காப்பீட்டினை புதுப்பித்து கொள்கிறார். எதிர்பார விதமாக காப்பீட்டினை புதுப்பித்த இரண்டு வருடங்களில் அகிலா விபத்தில் சிக்கி ஒரு கையினை இழக்கிறார். ஆனால் அவரது காப்பீட்டினால் அவரது மருத்துவ செலவுகளை சமாளிக்க ரூ.2,50,000/- வழங்கப்பட்டது.

## உரிமைகோரல் செயல்முறைக்கான வழிகாட்டி

1. அயலகத் தமிழர் நல ஆணையரக வலைதளம் **(nrtamils.tn.gov.in)** மூலம் படிவத்தை பூர்த்தி செய்து தங்கள் கோரிக்கையை தெரிவிக்கவும்.
2. வலைதளத்தில் கோரியுள்ள தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கவும்
3. NRT வாரியம் தங்களது கோரிக்கைக்கான ஒப்புதல்/ நிராகரிப்பை தீர்மானிக்கும் அல்லது கூடுதல் விவரங்களைக் கோரும்
4. உரிமைகோரலுக்கான தங்களது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்கும் தொகை வழங்கப்படும்